[பேரவைத் தலைவர்] [2002 மார்ச் 11

மறைந்த இப்பெரியவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரு மணித்துளிகள் அமைதிகாக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) ஜம்மு-காஷ்மீர் சட்டமன்றத்தின்மீது 1-10-2001 அன்று மற்றும் இந்திய நாடாளுமன்றத்தின்மீது 13-12-2001 அன்று நடைபெற்ற தீவிரவாதத் தாக்குதலில் பாதுகாப்புப் படையினர் மற்றும் ஏனைய அலுவலர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1-10-2001 அன்று ஜம்மு-காஷ்மீர் மாநிலச் சட்டமன்றத்தின்மீது நடைபெற்ற தாக்குதல் மற்றும் 13-12-2001 அன்று இந்திய நாடாளுமன்றத்தின்மீது நடைபெற்ற தீவிரவாதத் தாக்குதலில் தம் இன்னுயிரை இழந்தவர்களுக்கு இரங்கல் தீர்மானம்.

"1-10-2001 அன்று ஜம்மு-காஷ்மீர் மாநிலச் சட்டமன்றத்தின் மீதும், 13-12-2001 அன்று இந்திய ஜனநாயகத்தின் உயரிய அமைப்பான இந்திய நாடாளுமன்றத்தின் மீதும் நடத்தப்பட்ட தீவிரவாதிகளின் தாக்குதல்களை அறிந்து இப்பேரவை மிகவும் அதிர்ச்சி அடைகிறது. இத்தகைய தாக்குதல்கள் இந்தியத் திருநாட்டின் மீதும் இந்திய ஜனநாயகத்தின் மீதும் நடத்தப்பட்ட தாக்குதல்களாகவே இப்பேரவை கருதுகிறது. தீவிரவாதம் மற்றும் அதன் வன்முறைச் செயல்களை எந்தச் சூழ்நிலையிலும் இம்மண்ணில் எவராலும் ஏற்றுக்கொள்ள இயலாது. தீவிரவாதத்தின் எந்த ஒரு வடிவமும் அடியோடு வேரறுக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை இப்பேரவை உறுதி செய்கிறது. இச்சம்பவங்களின்போது தன்னலங்கருதாது தங்களது கடமையை நிறைவேற்றும் வேளையில் நாட்டின் பாதுகாப்பிற்காகத் தங்கள் இன்னுயிரை நீத்த பாதுகாப்புப் படையினர் மற்றும் ஏனைய அலுவலர்களின் மறைவுக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது."

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு

2002 மார்ச் 11] [பேரவைத் தலைவர்]

உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதிகாக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

(ஆ) திரு. ஜி.எம்.சி. பாலயோகி, மக்களவைத் தலைவர் மற்றும் திரு. ம. அப்துல் லத்தீப், திரு. ஆ. செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.எம்.சி. பாலயோகி, திரு. ம. அப்துல் லத்தீப் மற்றும் திரு. ஆ. செல்வராஜ் ஆகியோர் மறைவு குறித்த இரங்கல் தீர்மானங்கள். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஜி.எம்.சி. பாலயோகி, மக்களவைத் தலைவர் அவர்கள் மறைவு குறித்து.

"இந்திய நாடாளுமன்ற வரலாற்றில் இளம் வயதில் மக்களவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரும், முழுமையான ஜனநாயகவாதியும், நலிந்த பிரிவினரின் நலனுக்காக அரும்பாடுபட்டவரும், ஜனநாயக, நாடாளுமன்ற மரபுகளை நேர்மையுடன் பாரபட்சமின்றி கடைப்பிடித்தவரும், தனது திறமை, கடும் உழைப்பு, தொலைநோக்கு, அனைவரையும் அரவணைத்துச் செல்லும் பாங்கு ஆகியவற்றால் அனைத்துத் தரப்பினராலும் கட்சி பாகுபாடின்றி பாராட்டப்பெற்றவரும், எளிமையும், அடக்கமும் தன்னகத்தே கொண்டு 13-வது மக்களவைத் தலைவராகத் திறம்பட பணியாற்றிய திரு. ஜி.எம்.சி. பாலயோகி அவர்கள் 3-3-2002 அன்று எதிர்பாராத விபத்தின் காரணமாக அகால மரணமடைந்த செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

முற்பகல் 10-10

திரு. ஜி.எம்.சி. பாலயோகி அவர்கள் வழக்குரைஞராகவும், சமூகத் தொண்டராகவும், விளையாட்டு வீரராகவும், விவசாயப் பெருங்குடி மகனாகவும், தொழிற்சங்கவாதியாகவும் திகழ்ந்தவர். 1991-96 ஆகிய